அதே இடத்திலே கட்டித்தருவார்களா என்பதையும் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம். அவர்கள் போக்குவரத்துக் கழகத்திற்குத் தருவதற்கு இசைவுத் தந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தருவதாக ஒத்துக்கொண்டால் இந்த ஆண்டு அந்தப் பணியை நிச்சயமாகத் தொடங்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

152—

பொது மருத்துவமனை

***54551—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நோயாளர்களின் சராசரி எண்ணிக்கையைப் பரிசீலித்துப் பார்க்கையில், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு நிருவாகரீதியாக தற்போது சாத்தியக்கூறுகள் எழவில்லை.

2010 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட சீளியூர் ஆரம்ப சுகாதார நிலையம் தற்பொழுது 24 மணி நேரமும் பிரசவ வசதியோடுகூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சுகாதார நிலையம் தோளம்பாளையம், வெள்ளியங்காடு, காளம்பாளையம், கெம்மாரம்பாளையம் ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கிய, 50 குக்கிராமங்களை உள்ளடக்கிய 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியாகும். பெரும்பாலும் மலைவாழ் மக்கள், ஆதி திராவிடர் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், விவசாயம் செய்கின்ற கூலித் தொழிலாளர்கள் வந்து செல்கின்ற மருத்துவமனை. நாள் ஒன்றுக்கு 200-க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் வந்து செல்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 20-க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, இந்தச் சுகாதார நிலையத்தில் போதுமான வசதி இல்லாத காரணத்தினாலே காரமடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் நலன் கருதி இந்த ஆண்டிலே, இந்தச் சுகாதார நிலையத்தை அனைத்து வசதிகளோடுகூடிய, மருத்துவ வசதி மற்றும் ஆய்வகங்களுடன்கூடிய 30 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் மிகவும் குறைவான மக்கள்தொகை கொண்ட பகுதியாக உள்ள சீளியூரில் ஆரம்ப சுகாதார நிலையமானது மகப்பேறு பிரிவுடன்கூடிய ஒரு கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காரமடையில் ஒரு முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும், ஒரு அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 20 கிலோ மீட்டர் தொலைவில் மேட்டுப்பாளையத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய வட்ட அரசு மருத்துவமனை*

செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 110 நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இங்கு E.C.G. மற்றும் Nebulizer போன்ற கருவிகள் இயங்கி வருகின்றன. 2 மருத்துவர்கள் இங்கே பணியாற்றுகிறார்கள். 18 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்த மருத்துவமனைக்குக் கூடுதலாக 6.6 இலட்சம் ரூபாயில் செவிலியர் குடியிருப்பு கட்டப்பட்டு வருகிறது. 3 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு 24 மணி நேரமும் அங்கே பிரசவ சிகிச்சை அளிப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். மாதத்திற்கு சராசரியாக 15-இலிருந்து 20 பிரசவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. போதிய கருவிகளும் இருக்கின்றன, போதிய மருந்துகளும் இருக்கின்றன. அங்கே மக்கள் அடர்த்தி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மேற்கொண்டு தரம் உயர்த்துவதைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

முற்பகல் 9-45

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, சிறுமுகை, சண்முகாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏறத்தாழ இலட்சத்திற்கும் மேலான மக்கள் வாழ்கின்ற பகுதியில் அமைந்தனவாகும். மலைவாழ் மக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகவும், விவசாயக் கூலிகள் நிறைந்துள்ள பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினாலும், மக்கள் அடர்வு ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் கொண்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 30 படுக்கை அறைகளைக் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த வேண்டுகிறேன்.

தற்போது, வீரபாண்டி பேரூராட்சியில் ஏறத்தாழ 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கே ஒரு துணை சுகாதார நிலையமும் இயங்கி வருகின்றது. ஆகவே, வளர்ந்து வருகின்ற இந்தப் பேரூராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தி அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையிலே கடந்த இரண்டு

2010 மே 10]

ஆண்டுக் காலத்திற்கு முன்பாக செவிலியர் குடியிருப்பு மற்றும் மருத்துவர் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஏறத்தாழ 60 இலட்சத்திற்கும் மேலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தமும் கோரப்பட்டது. இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. ஆகவே, அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த நிதி ஆண்டிலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, குமரபுரம், தென்பொன்முடி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அவற்றுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, ஒரு முக்கிய நிகழ்வாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு, அதோடு என்று உரையை முடிக்காமல் போய்க்கொண்டே இருக்கின்றீர்களே? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் பரிசீலிக்க முடியும். ஆனால், மேட்டுப்பாளையம் பகுதியில் உள்ள காரமடை ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனைச் சுற்றியுள்ள மூன்று கிராமப் பகுதிகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், 30,000 மக்கள் தொகை கொண்ட பகுதியில்தான் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முடியும். அதுபோன்று விதிமுறைகளுக்குட்பட்டிருந்தால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்கொடுங்காலூர் கிராமத்தில் சுமார் 10,000 மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியம்

[2010 மே 10

அந்த மருத்துவமனையை அரசுக்கு ஒப்படைக்கும் நிலை உள்ளது. எனவே, நமது அரசு அங்கே துணை சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து உள்ளாட்சித் துறை மற்றும் சுகாதாரத் துறை ஆகிய இரண்டு துறைகளுடைய அதிகாரிகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்பின்கீழ் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இதுபோன்று கிட்டத்தட்ட 60-க்கும் மேற்பட்ட மருந்தகங்கள் இருக்கின்றன. அவற்றுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வது குறித்து இரண்டு துறைகளின் அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

153—

கால்நடை மருந்தகம்

***107900—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி ஒன்றியம், முருக்கம்பட்டு கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், முருக்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைத்திட அரசுத் தரப்பில் இதுவரை செயற்குறிப்பு எதுவும் இல்லை.